1982 மார்ச் 5]

* வினா எண் 363 திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்த எந்த வகுப்பினராவது அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) எத்தனை வகுப்பினர் அப்படி கோரிக்கை வைத்துள்ளனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இருபத்தேழு வகுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர்.

திரு. ரா. கு. பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 27 பேர்கள் பட்டியலில் கம்மவார் நாயுடுபற்றிக் குறிப்பிட்டார்கள். எஸ்.எஸ். எல்.சி. புத்தகத்தில் வடுகன் என்று குறிப்பிட்டால்தான் பிற்படுத்தப்பட்ட வர்கள் பட்டியலில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே நாயுடு சமூகத்தினர் அனைவரையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி சேர்ப்பதற்கில்லை. நாயுடுகள் அனைவரையும் செட்டியார்கள் அனைவரையும் சேர்க்கும் நிலை இல்லை. அதிலே பிரிவு பிரிவாக இருக்கிறார்கள். மிகமிகப் பின்தங்கியவர்கள் பொருளாதாரத்திலே பின்தங்கியவர்கள், கல்வித் துறை யிலே பின்தங்கியவர்கள் இவர்களை அடிக்கடி சேர்த்து வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த 27 பேர்கள் என்று சொன்னேன்.

தொண்டைமண்டல ஆதிசைவ வெள்ளாளர்கள், ரோமன் கத்தோலிக், மலங்கார சிரியோ மலபார் ரைட்ஸ், லிங்காயத்துக்கள், கம்மவார் நாய்க்கர்/ செட்டியார், நாயர்கள், சைவ செட்டியார், சோகுல வெள்ளாளர்கள், ஆரியர் கொண்டா செட்டி, வெள்ளாளர் (கன்னியாகுமரி மாவட்டம்), வெள்ளாளர் (இதர மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்), புலவர் (கோயம்புத்தூர் மாவட்டம்), பாண்டியா வெள்ளாளர்கள், கொங்குநாயக்கர்கள், அரியூர் நகரத்தார், கோட் டைப்புர செட்டியார், ஒரு குண்டாரெட்டி, எழுத்தச்சர், மஞ்சபுத்தூர் செட்டி யார், தேசிகர், ஜெனோவா சால்வேஷன் சர்ச் மெம்பர்கள், வேலர், அனைத்து மதம் மாறிய கிறிஸ்துவர்கள் (பிற்பட்ட சாதிகளிலிருந்து மதம் மாறியவர்கள்), கோன் கொல்லர்கள், மூப்பன், நாட்டுக்கோட்டை நகரத்தார், ராவுத்தர், மாக்

காயர்—ஆகிய 27 வகுப்பினர்கள் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். நான் முதலிலே கூறியபடி ஒரு தனி நபர் குழு இதுபற்றி ஆராய்ந்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஒரே ஜாதியில் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு சிலர் சில சலுகைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். ஒரே ஜாதியில் உள்ள உயர்ந்த பிரிவினர், தங்களைத் தாழ்ந்த பிரிவினர் என்று அத்தாட்சி பெற்று, சலுகைகள் பெறுவது அரசுக்குத் தெரியுமா, அப்படியானால் அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தவறுகள் ஆங்காங்கு சில சமயங்களில் நடைபெறுவதை ஒட்டித்தான் நாம் மறுபடியும் ஆய்வு செய்கிறோம். அந்த வகையிலேதான் தேர்வு ஆணைக் குழு அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் ஆய்வு செய்து வருகிறது. தவறு என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும், கொடுக்கப்பட்ட சலுகைகளை திருப்பி வாங்கும் முயற்சியும் சில பல இடங்களில் நடைபெற்று இருக்கின்றது. அத்தகைய தவறுகள் நடைபெறாதவாறு பார்த்துக்கொள்வதற்காகத்தான் விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்களில், தமிழ் பேசுகின்றவர்கள் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலும், உருது பேசுகின்றவர்கள் முன்னேறிய ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லுகின்ற நிலை இருக்கின்றது. எனவே உருது பேசும் முஸ்லீம்களையும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுபற்றியும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை சமூகப் பிரிவுகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற போது ஒரு 27 பிரிவினர் தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரினார்கள் என்று கூறினார்கள். அதற்கு மாறாக, பொருளாதாரத் துறையிலே மிகவும் பின்தங்கி இருப்பவர்கள் யார் என்று பகுப்

பாய்வு செய்து அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர் களுக்கு உதவி செய்யும் நிலை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர் களே, பிற்பட்டோர் பட்டியல் என்று வருகின்றபோது சமுதாயத்தில் பின் தங்கியவர்கள், கல்வியில் பின்தங்கியவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய வர்கள் என்கிற முறையில் அவர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். இந்த வேறுபாடுகள் நாளடைவில் மாறி, பொருளாதாரத்தில் மட்டும் யார் யார் பின் தங்கியிருக்கிறார்களோ அவர்களை அந்தப் பட்டியலில் வைத்து, அந்தச் சலுகைகளை அளிக்க வேண்டும் என்பது இறுதி முடிவாக இருக்கக்கூடும். அந்த முடிவை நாம் எட்டுகின்ற வரையில் இந்தச் சலுகைகளை சமூகத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கு நாம் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கும்—குறிப் பாக இந்த அளவிற்குக் கீழே வருமானம் பெறுபவர்களுக்கு வேறு வகையில் அரசு ஸ்காலர்ஷிப்புகள் போன்ற சலுகைகள் மூலம் உதவிகளைச் செய்து வரு கிறோம். இந்த பிற்பட்டோருக்கு அளிக்கப்படுகின்ற அத்தனை சலுகை களையும் எல்லோருக்கும் தரும் நிலைமை இல்லை. அந்தப் பட்டியலில் யார் யார் சேர்க்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அந்தச் சலுகைகள் தரப்படுகின்றன.

காரைப்பட்டி கிராமத்திலுள்ள குளத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு.

* வினா எண். 364. திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா காரைப்பட்டி கிராமத்தில் ஊருக்கு கிழக்கே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு குளத்தை தூர்த்து தனியார் ஒருவர் ஆக்ரமித்து தென்னம்பிள்ளை வளர்ப்பது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனை நிவர்த்திக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?